அ.வ.எண்.8/2015 நாள்: 23.03.2026

பி.சா.1 திரு.ராமதாஸ்

<u>சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

12) 3 வது இன சொத்து சம்மந்தமாக இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.99/2021 என தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கில் 4 இன சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் இல்லை. பி.சா.ஆ.1– ஆவணத்தில் 4 இன சொத்துக்களையும் குறித்து எழுதப்படவில்லை என்றால் சரியல்ல, சாட்சி பி.சா.ஆ.1 ஆவணத்தை பார்த்துவிட்டு 3 இன சொத்துக்கள் மட்டும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், வழக்கு நிலுவையிலிருக்கும்போது வழக்குரை திருத்தம் செய்யப்பபட்டு 4 வது இன சொத்து சேர்க்கப்பட்டுள்ளதால் மேற்படி 4 வது இன சொத்து பி.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என்றும், 2 வது இன சொத்தில் 4 வது இனசொத்தும் அடங்கியுள்ளது என்றும் சாட்சியமளிக்கிறார்.

13) 11.01.2016 அன்று வாதிக்கும் பிரதிவாதிக்கும் பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான். மற்ற பிரதிவாதிகள் யாரையும் மேற்படி பஞ்சாயத்தில் சேர்க்கவில்லை என்றால் அவர்கள் இருந்தார்கள் அவர்களிடம் கையெழுத்து பெறவில்லை, மற்ற பிரதிவாதிகள் ஒப்புக்கொண்டார்கள். வாதியின் சொத்தில் அரசு வருவாய் ஆவணங்களான பட்டா மற்றும் வரைபடத்தில் தவறுதலாக இருந்தது தொடர்பாக பஞ்சாயத்து நடந்தது என்றால் சரிதான், வாதியின் சொத்தில் மட்டுமல்ல, 1, 2, 3 இன சொத்துக்களில் பட்டா மற்றும் வரைபடம் தவறாக உள்ளது. மேற்படி பஞ்சாயத்தில் வாதிக்கு 701 சதுரடி ஒதுக்கி பேசி முடிக்கப்பட்டது என்றால் சரிதான், 8–ல் 1 பாகம் ஒதுக்கப்பட்டது. மேற்படி பஞ்சாயத்தில் எந்தெந்த சொத்து எந்தெந்த சர்வே நம்பரில் உள்ளது என்று குறிப்பிட்டு கூறப்படவில்லை என்றால் சரிதான்.

14) வாதி கோரியவாறு அவரது வீட்டிற்கு பின்புறம் உள்ள இடம் ஒதுக்கப்பட்டது. சர்வே எண்.59/44, 59/42 ஆகிய 1 வது இன சொத்தில் அடங்குமா என்றால் சரிதான், அத்துடன் சர்வே எண்.59/1–ம் அடங்கும். அது பிரதிவாதி ஜோதிமணி பெயரில் ஏற்கனவே பட்டா வழங்கப்பட்டுள்ளது. சர்வே எண்.59/44 பட்டாப்படி 2209 சதுரடி இருக்குமா என்றால் என்னால் குறிப்பிட்டு கூறஇயலாது. சர்வே எண்.59/42 பட்டாப்படி 3547 சதுரடி இருக்குமா என்றால் என்னால் குறிப்பிட்டு கூறஇயலாது. 2 வது இன சொத்தில் சர்வே எண்கள் 59/41, 59/40 அடங்கும்

என்றால் சரிதான். சர்வே எண்.59/41 பட்டாப்படி 1509 சதுரடி இருக்குமா என்றால் அது கிரையம் ஆகிவிட்டதால் என்னால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை. சர்வே எண்.59/40 பட்டாப்படி 6839 சதுரடி இருக்குமா என்றால் என்னால் குறிப்பிட்டு கூறஇயலாது.

15) 3 வது இன சொத்தான சர்வே எண்.59/33 பட்டாப்படி 4368 சதுரடி இருக்கும் என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் நான்கும் பட்டாப்படியும், கிரைய பத்திரப்படியும் விஸ்தீரணம் வேறுபாடாக உள்ளது என்றால் சரிதான், அத்துடன் புலவரைபடமும் வேறுபாடாக உள்ளது. வாதியின் சர்வே எண்.59/39–ல் பட்டாப்படி 3507 சதுரடி குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாதியினுடைய கிரைய பத்திரத்திலுள்ள விஸ்தீரணமும், எனது பெயரிலுள்ள செட்டில்மென்ட் ஆவணத்தின் மூலப்பத்திரத்தின் விஸ்தீரணமும் போக மீதியுள்ள அனைத்தும் எனது தகப்பனார் பெயரில் உள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் பெயரில் பட்டாப்படி 15000 சதுரடி வருகிறது என்றால் என்னால் குறிப்பிட்டு கூறுமுடியவில்லை.

16) புல எண்.59/44, 59/42, 59/41, 59/40, 59/33, 59/39 பட்டாப்படி 21940 சதுரடி என்றால் என்னால் குறிப்பிட்டு கூறமுடியவில்லை. மேற்படி வாதியின் கிரைய பத்திரத்தின்படியும், செட்டில்மென்ட் ஆவணத்தின் முன்னோடி கிரைய பத்திரத்தின்படியும் 5907 சதுரடி போக மீதமுள்ள சதுரடி 16033 சதுரடி வாதி, பிரதிவாதிகள் பாகபிரித்துக்கொள்ள நான் ஒப்புக்கொள்கிறேனா என்றால் 16033 சதுரடியில் எனது தகப்பனார் 4968 சதுரடியை கிரையம் செய்துள்ளார், அதுபோக மீதமுள்ள 6072 சதுரடிதான் பாக்கியுள்ளது. கிரையம் செய்து கொடுத்த சொத்தில் பாகபிரிவினை செய்ய முடியாது. 16033 சதுரடியில் 4968 கிரையம் செய்தது போக மீதம் எவ்வளவு சதுரடி உள்ளது என்றால் 16033 சதுரடி என்பது கணக்கு பிழையாக உள்ளது.

17) மேற்படி பட்டா பிராகாரம், கிரைய பத்திர அளவுகளும் சரியாக இருந்தால் பாகம் பிரித்துக்கொள்ள தயாராக இருக்கிறேனா என்றால் எனது தாயார் பெயரிலுள்ள பத்திரப்படி உள்ள அளவும், எனது தகப்பனார் பெயரிலுள்ள பத்திரப்படி உள்ள அளவும் அவர்களுக்கு வழங்கிய பட்டாப்படி உள்ள அளவும் சரியாக இருந்தால் பாகம் பிரித்துக்கொள்ள எனக்கு சம்மதம். எனது தாயார் பெயரிலுள்ள கிரைய பத்திரப்படி உள்ள அளவும், செட்டில்மென்ட் ஆவணத்திலுள்ள அளவும் தவறாக உள்ளது என்றால் சரிதான். எனது தாயார் பெயரிலுள்ள நன்செய் நிலங்களை செட்டில்மென்ட் மூலம் எழுதிவைத்துள்ளார்

என்றால் சரிதான். வாதிக்கும் அவரது தாயார் செட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளார் என்றால் சரிதான்.

18) எனது தாயார் வாதி நகைகள், பணம் கொடுத்துள்ளதற்காக செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிவைத்துள்ளார் என்றால் சரியல்ல. 3 வது இன சொத்தை எனது பெயரில் பட்டா மாற்றம் செய்துள்ளேன் என்றால் சரிதான். 18.07.2012–ல் செட்டில்மெண்ட் ஆவணத்தில் தாயாரின் கிரைய பத்திரத்தில் பதிவாகியுள்ள விவரத்தை கூறிவிட்டு கிரைய பத்திரத்தின்படி உள்ள அளவை பதிவுசெய்யவில்லை என்றால் சரியல்ல, பட்டாவிலுள்ள அளவுப்படிதான் செட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டுள்ளதே தவிர கிரைய பத்திரத்திலுள்ள அளவுப்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்படவில்லை. எனது தாயார் வாதியிடம் 3 வது இன சொத்தின் கிரைய பத்திரத்தை கொடுத்திருந்ததால்தான் பட்டாப்படி செட்டில்மெண்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பத்திரத்தை திருடி எடுத்துசெல்லவில்லை நான் சொல்வது பொய் என்றாலும், நான் 3 வது இன சொத்தை நாங்களாவே செட்டில்மெண்ட் ஆவணம் எழுதிக்கொண்டுள்ளோம் என்றால் சரியல்ல.

19) மேற்படி நான்கு இன சொத்துக்களிலும் வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு பாகம் உள்ளது என்றால் 1, 2, 4 இன சொத்துக்களில் மட்டும் பாகம் உள்ளது, 3 வது இன சொத்து எனக்கு தனிப்பட்ட சொத்து என்பதால் அதில் எவருக்கும் பாகம் கிடையாது. 3 வது இன சொத்து குறித்து எனக்கு எழுதிவைக்கப்பட்ட செட்டில்மெண்ட் ஆவணம் செல்லாது என விளம்புகை செய்யக்கோரி மற்றொரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

ம.வி.இல்லை.

S.d/Ramadass

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2026.03.23 19:28:38 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU